[1979 பிப்ரவரி 20]

குறிப்பிட்டேன், பாலிதீன் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று திண்டுக்கல்லில் கூட்டுறவு முறையில் இயங்கி வந்து இருக்கிறது என்று. அவர்கள் மூலமாக பால் பைகள் செய்து கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம். அடுத்த ஆண்டிலிருந்து தமிழகத்தில் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனங்களிடமிருந்து முன்னுரிமை கொடுத்து வாங்க இருக்கிறோம். அதிலும் குறிப்பாக அரசு நிறுவனங்களிடமிருந்தும், கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும் பெற இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி

வினா எண். 119 — திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதி, தறிக் கொட்டகை அமைப்பது குறித்து திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:

(அ) & (ஆ): கைத்தறி நெசவாளர்களுக்கு நெசவுத்தொழில் செய்வதற்கும் வசிப்பதற்கும் ஏற்றாற்போல் நடப்பு ஆண்டில் 2000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டின் பரப்பளவு சுமார் 300 சதுர அடிக்குள்ளும் உத்தேச கட்டிட செலவு ரூ. 5,000க்குள் அடங்கும்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 2,000 வீடுகள் கட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அதிலே தென்னாற்காடு மாவட்டத்தில் எத்தனை வீடுகள். எவ்வளவு ரூபாய் திட்டத்தில் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசோடு கடிதப்போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து ஓரளவு நிதி உதவி இந்தத் திட்டத்திற்கு வேண்டியிருக்கிறது. அவர்கள் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டபிறகு தமிழ் நாட்டில் எந்தெந்த இடங்களில் இந்தத் திட்டம் அமல் படுத்த முடியும் என்பதை அறிவிக்க இயலும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படுகிற வீடுகள் எந்த அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்படுகின்றன? வீடு கட்ட கடன் கொடுக்கப்படுகிறது என்றால் மானியமாக ஏதாவது உண்டா?

[1979 பிப்ரவரி 20

மானியம் கொடுக்கப்படுகிறது என்றால் அது மாநில பொது நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறதா அல்லது வங்கியிலிருந்து கொடுக்கப்படுகிறதா அல்லது கிராம வீடு கட்டும் சங்கங்களிலிருந்து கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 5,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் 3,500 ரூபாயை 'ஹட்கோ' கடனாகக் கொடுக்கிறது. மீதமுள்ள 1,500 ரூபாயை மத்திய அரசு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் கடனாகக் கொடுப்பதை ஒப்புக்கொண்டு, பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு மானியமாகக் கொடுத்தால் 'ஹட்கோ' நிறுவனம் வழங்கும் 3,500 ரூபாய் கடனுக்கு ஆகின்ற வட்டியை மாநில அரசு மானியமாகக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டி இருக்கிறது. 3,500 ரூபாய் கடனை நெசவாளர்கள் 20 ஆண்டுத் சுலபத் தவணையில் செலுத்த வேண்டியிருக்கும்.

திரு. வி. கோ. சின்னசாமி : தலைவரவர்களே, 2000 வீடுகள் கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டிக்கொடுப்போம் என்று தெரிவித்தார்கள். என்னுடைய தொகுதியில் அதிகமாக நெசவாளர்கள் இருக்கிறார்கள். எனவே, கிராமப்புறங்களுக்கு முன்னுரிமை கொடுத்து என்னுடைய தொகுதியில் அதிகமாக வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, மொத்த மதிப்பு ரூ. 5000 என்று கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் முதலில் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராக இருக்கும் நெசவாளர்களுக்கு மட்டுமே கட்டிக்கொடுப்பதற்கு செயல்படுத்தப்படலாம் என்று நாங்கள் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். எந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் நெசவாளர்களுக்கு வீடு கட்ட மனையும் மேற்கொண்டு மின்சார வசதி, குடிநீர் வசதி, போன்ற வசதிகளையும் செய்துகொடுக்க முன் வருகிறதோ அந்தச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, அரசு வகுத்துள்ள இந்த புதியத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டம் இணைக்கப்பட்டு இருக்கிறதா? அப்படியானால் அதுபற்றி விவரிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அறிவித்ததைப்போல மத்திய அரசிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பிறகுதான் எந்தெந்த சங்கங்களின் மூலம் எங்கெங்கு இத்திட்டத்தை அமுலாக்குவது என்பது பரிசீலிக்கப்படும்.

1979 பிப்ரவரி 20]

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, 300 சதுர அடி, வீடு என்பது மிகக்குறைந்த இடம். நெசவுத் தறி போட்டு, குடும்பம் நடத்த அந்த இடம் போதாது. அதைப் போல 5,000 ரூபாய் என்பதும் மிகக் குறைந்த தொகை. இந்த இரண்டையுமே அதிகப்படுத்த வேண்டும். அதைப்போல இதற்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகள் பல பழுதாகி இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பழுதடைந்த வீடுகளை பழுது பார்க்க முடியாமல் நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்கள் வீட்டுக்கு வழங்கிய கடனையும் திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே, கடனை ரத்து செய்து, பழுதடைந்த வீடுகளை பழுதுபார்த்துக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள பஞ்சாலைகள்

* வினா எண் 120 — திரு. திருப்பூர் ஆர். மணிமாறன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 30-6-1977 முதல் மூடப்பட்டிருந்த பஞ்சாலைகளில் திறக்கப்பட்ட பஞ்சாலைகள் எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் புனர்வாழ்வு பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:

(அ) 30-6-77 அன்று மூடப்பட்டிருந்த 8 நூற்பாலைகளில் 7 ஆலைகள் திறக்கப்பட்டுவிட்டன.

(ஆ) இதன் மூலம் 1,944 தொழிலாளர்கள் புனர்வாழ்வு பெற்றுள்ளனர்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, 7 நூற்பாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். மீதமுள்ள ஒரு நூற்பாலையையும் திறக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, 120 தொழிலாளர்களைக் கொண்ட கோவை பத்மா மில்ஸ் ஒரு கூட்டாண்மை நிறுவனம், 9-11-1976 முதல் மூடப்